அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 07/2000

எனது இல: 1/543E/16/95.
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07.
2000, மார்ச் 9.

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

<u>பதவியுயர்வின் மீது சம்பளம் மாற்றியமைத்தல்</u>

மேற்போந்த விடயம் சம்பந்தமாக, 1994.02.11 ஆம் திகதிய 11/94 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. மேற்போந்த சுற்றறிக்கையின் நியதிகளின்படி, பதவியுயர்வொன்றின் மீதான சம்பளம் மாற்றியமைக்கப்படுகையில், சம்பந்தப்பட்ட அலுவலர் பெறும் சம்பளமானது சேவையில் அவரிலும் கனிட்டராகவுள்ள அலுவலரொருவரின் சம்பளத்திலும் பார்க்க ஒப்பீட்டளவில் ஆகக் குறைவாக வரும் குறிப்பிட்ட சில எடுத்துக்காட்டுக்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. அத்தகைய முரண்பாட்டு நிகழ்வுகளை இயன்றளவு குறைக்கும் நோக்குடன் 11/94 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையானது பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

03. தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் 5:3, 5:3:1, 5:3:2, 5:3:3, 5:3:4 ஆம் உட்பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்காக பின்வரும் உட்பிரிவுகள் பதிலீடு செய்யப்பட்டுள்ளன.

" 5. <u>பதவியுயர்வு மீதான சம்பளம்:</u>

5:3. அலுவலரொருவர் எப்பதவிக்கு பதவியுயர்வு அளிக்கப்பட்டாரோ அப்பதவியின் சம்பளமானது, ஏற்றத்துடனான சம்பள அளவுத்திட்டமொன்றாக இருக்குமிடத்து, பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைய, அவருடைய சம்பளம் ஒரு சம்பள அளவுத்திட்டத்திலிருந்து வேறு சம்பள அளவுத்திட்டத்திற்கு மாற்றப்படல் வேண்டும். இந்தச் சம்பள மாற்றியமைப்பின்போது அலுவலரொருவர் கீழ்ப்பதவிக்குள் அவர் பதவியுயர்வளிக்கப்பட்ட திகதிவரை சம்பள ஏற்றமொன்றினை அவர் உழைத்திருப்பாராயின், அவர் உழைத்துள்ள சம்பள

ஏற்றத்திற்குச் சமமானதொரு தொகை அவருக்கு வழங்கப்படல் வேண்டும். பதவியுயர்வின் மீதான சம்பளப் படிநிலையைத் தீர்மானிக்கையில், சம்பள ஏற்றத்தின் அவர் உழைத்துள்ள பெறுமதியைப் பொருட்படுத்தாது, கீழே காட்டப்பட்டுள்ளவாறு அவருடைய சம்பளம் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

5:3:1. பதவியுயர்வின் மீது, அலுவலரொருவரால் பெறப்பட்ட கடைசிச் சம்பளமானது புதிய சம்பள அளவுத்திட்டத்தின் சம்பளப் படிநிலைகளுக்கிடையில் வருமிடத்து, மிகக் கிட்டிய அடுத்த உயர்ந்த சம்பளப் படிநிலையில் அவர் வைக்கப்படல் வேண்டுமென்பதுடன், மேலதிக சம்பள ஏற்றமொன்றும் வழங்கப்படல் வேண்டும்.

5:3:2. பதவியுயர்வின்மீது, அலுவலரொருவரால் பெறப்பட்ட கடைசிச் சம்பளமானது புதிய சம்பள அளவுத்திட்டத்தின் மீதான தொடக்கச் சம்பளத்திற்கு அல்லது ஒரு சம்பளப் படிநிலைக்கு சமமாகவிருக்குமிடத்து, அடுத்த உயர்ந்த படிநிலையில் அவர் வைக்கப்படல்வேண்டும்.

5:3:3. பதவியுயர்வின்மீது, அலுவலரொருவரால் பெறப்பட்ட கடைசிச் சம்பளமானது, புதிய சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்திலும் ஒரு சம்பள ஏற்றப் படிநிலைக்கு அல்லது அதற்கும்கூட, குறைவானதாகவிருக்குமிடத்து, புதிய சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்தில் அவர் வைக்கப்படல்வேண்டும்.

5:3:4. பதவியுயர்வின்மீது, அலுவலரொருவரால் பெறப்பட்ட கடைசிச் சம்பளமானது, புதிய சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்திலும் பார்க்க ஒரு சம்பள ஏற்றப் படிநிலையிலும் குறைவானதாகவிருக்குமிடத்து, புதிய சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளப் படிநிலைக்கும் மேலாக மேலதிக சம்பள ஏற்றம் ஒன்று அவருக்கு வழங்கப்படல் வேண்டும்.

04. 11/94 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 5:4, 5:6, 5:7 ஆம் உபபிரிவுகள் மாற்றமெதுவுமின்றி அப்படியே இருக்கும்.

05. 11/94 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 5:5 ஆம் உபபிரிவானது இத்தால் நீக்கப்பட்டுள்ளது.

06. 1988.01.01 ஆந் திகதியிலிருந்து 1999.12.31 ஆந் திகதிவரை நடைமுறைப்பட்ட 11/94 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின்கீழ் பதவியுயர்வுபெற்ற அலுவலரொருவர் முன்னராக வகித்த பதவி/வகுப்பு/தரத்தின் சம்பளமும், தரமுயர்த்தப்பட்ட பதவி/வகுப்பு/தரத்தின் வேதனவேற்றப் பெறுமதியும் சரிசமமாகியும், வேதனவேற்றத் திகதியும் தரமுயர்த்தப்பட்ட திகதியும் ஆகிய இரண்டும் ஒரேதிகதியில் அமைந்தும், அவ்வகுப்புக்கு/தரத்திற்கு தனக்குப் பின்னராக தரமுயர்த்தப்பட்ட கனிஷ்ட அலுவலரொருவரின் சம்பளப் படிநிலையைப் பார்க்க தனது சம்பளம் குறைந்தும் இருப்பின் இம்மூன்று விடயங்களினால் ஏதேனுமோர் அலுவலருக்கு இழப்புகள் ஏதும் நேர்ந்திருந்தால் அத்தகைய நபரொருவருக்கு தரமுயர்த்தப்பட்ட பதவியின் புதிய சம்பளப் படிநிலையில் மேலும் ஒரு வேதனவேற்றத்தை பதவி உயர்வுத் திகதியிலிருந்து நடைமுறைப்படும்வண்ணம் மேலதிகமாக வழங்கவேண்டும்.

07. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளானவை 2000.01.01 ஆம் தேதியன்று முதல் வலுவுக்கு வருதலாதல் வேண்டும்.

08. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் விடுக்கப்பட்டுள்ளது.

(மஹிந்த பந்துசேன)
செயலாளர்,

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

நர/-